DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE,
NAGAPATTINAM

**அமர்வு வழக்கு எண். 185/2022**

**Deposition of witness for prosecution : PW- 2 (LW 3)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **தனபாக்கியம்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 31.10.2023**

**முதல் விசாரணை**

நான் வேதாரண்யம் முதலியார்தோப்பில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா.1ஐ தெரியும், எனது மகன் ஆவார். . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.11.2020 ம் தேதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் எதிரி அன்பழகன் எங்கள் வயலில் பனங்கொட்டைகளை போட்டுக்கொண்டிருந்தார். நான் வயல்பக்கம் போனபோது அதை பார்த்துவிட்டு எனது மகன் குமாரவேலிடம் சொன்னேன். எனது மகன் எதிரியின் மகனிடம் பனங்கொட்டை போட்டது சம்மந்தமாக போனில் சொன்னார். எதிரியின் மகன் எனக்கு நேரமில்லை, என்னால் இப்போது வரமுடியாது என்று சொல்லிவிட்டார். அதனால் எனது மகன் 27.11.2020 அன்று காலை 8.00 மணிக்கு எனது மகன் வயலுக்கு சென்று பனங்கொட்டைகளை எடுத்துக்கொண்டிருந்தபோது நானும், எனது கணவரும் உடனிருந்தோம். நாங்கள் வயலில் கீழே குனிந்து பனங்கொட்டைகளைஎடுத்துக்கொண்டிருந்தபோது எதிரி எனது மகனைப்பார்த்து தேவடியா மகனே, குச்சிக்காரி மகனே உன்னை தொலைத்து விடுகிறேன், உன்னை இன்றோடு ஒழித்து விடுகிறேன் என்று கூறிக்கொண்டு ஓடிவந்து மறைந்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது மகனின் மண்டையை நோக்கி வெட்டினார். எனது மகன் கைகளால் தடுத்ததால் எனது மகனின் இடது கையில் கட்டைவிரலுக்கும், ஆட்காட்டி விரலுக்கும் இடையே வெட்டுப்பட்டது.

எனது மகன் காயம்பட்ட இடது கையை மேலே தூக்கிக்கொண்டிருந்தபோது எதிரி அன்பழகன் மீண்டும் எனது மகனை கத்தியால் வெட்ட வந்தார்., எனது மகன் தனது வலது கையால் எதிரி அன்பழகனின் கத்தி வைத்திருந்த கையை பிடித்து இறுக்கியவுடன் எதிரி அன்பழகன் கத்தியை கீழே விட்டுவிட்டார். பின்னர் எதிரி அன்பழகன் எனது மகனின் வலது கையை அவரது வாயில் வைத்து கடிக்க ஆரம்பித்து விட்டார். நான் சத்தம் போட்டேன். அப்போது எனது அக்கா மகன் ராஜா என்னை பார்க்க வீட்டிற்கு வந்து நான் வயலுக்கு வந்துள்ளதை தெரிந்து கொண்டு வயலுக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது நான் சத்தம் போடவே ராஜா ஓடிவந்தார். பின்னர் எனது சத்தம் கேட்டு ஊர்ஜனங்களும் ஓடிவந்தார்கள், பின்னர் எதிரி அன்பழகன் கூட்டத்தை பார்த்ததும் ஓடிவிட்டார். பின்னர் காயம்பட்ட எனது மகனை ராஜா தனது இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அப்போது 108 ஆம்புலன்ஸ் வந்ததால் அதில் எனது மகன் ஏறி வேதாரண்யம்அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** - இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE,
NAGAPATTINAM

அமர்வு வழக்கு எண். 185/2022

**Deposition of witness for prosecution : PW- 1 (LW 1)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **குமரவேல்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 31.10.2023**

**முதல் விசாரணை**

நான் வேதாரண்யம் முதலியார்தோப்பில் வசித்து ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அதற்கு 3 நாட்களுக்கு முன்பாக வயலில் எதிரி அன்பழகன் வயலில் விதை போட்டுவிட்டு போகிறார் என்று எனது அம்மா என்னிடம் சொன்னார். விபரம் தெரிந்தவுடன் பள்ளியை விட்டு வந்தவுடன் நான் வயலுக்கு சென்று பார்த்தேன். எனது வயலின் எல்லையில் பனங்கொட்டை நெடுகிலும் போடப்பட்டிருந்தது. நான் உடனே அன்பழகன் மகனிடம் போன் செய்து என் வயலில் உனது அப்பா பனங்கொட்டைகளை போட்டுள்ளார், வந்து பார் என்று சொன்னேன். நான் நாளைக்கு வந்து பார்க்கிறேன் என்று அவர் சொன்னார். மறு நாள் அவர் வரவில்லை., நான் அதற்கு மறுநாள் அன்பழகன் மகனுக்கு மீண்டும் போன் செய்தேன். இன்று சாயங்காலத்திற்குள் வந்து பார்த்துவிடுகிறேன் என்று அவர் கூறினார். அன்று மாலையும் போன் செய்தேன். எனக்கு வருவதற்கு நேரமில்லை,. பிறகு பார்க்கிறேன் என்று சொன்னார். மழைக்காலமானதால் பனங்கொட்டை முளைத்து விடும் என்பதால் நானே போடப்பட்ட பன விதைகளை எடுப்பதற்காக சாக்கை எடுத்துக்கொண்டு கடந்த 27.11.2020 அன்று காலை 8.30 மணியளவில் நான் வயலுக்கு சென்று வயலில் போடப்பட்டிருந்த பனவிதைகளை எடுத்துக்கொண்டு வயலில் கிழக்கின் கடைசி பகுதிக்கு சென்றேன். அப்போது எதிரி அன்பழகன் கிழக்கு பக்கத்திலிருந்து என்னைப்பார்த்து ஏண்டா குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டிக்கொண்டே ஓடிவந்தார். நான் அதை

பொருட்படுத்தாமல் என் வயலில் உள்ள விதைகளை எடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது என்னடா நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே விதைகளை எடுத்துக்கொண்டிருக்கிறாய் என்று கூறி கத்தியால் என்னை குத்த ஓங்கினார், நான் திடீரென்று எனது இரண்டு கைகளாலும் தடுத்ததால் எனது இடது கையின் கட்டை விரலில் கத்தி பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. பின்னர் என் இடது கை கட்டைவிரல் காயம்பட்டு ரத்தம் கொட்டிக்கொண்டிருக்கும்போதே மீண்டும் எதிரி என்னை கத்தியால் வெட்டி வந்தபோது நான் எனது வலது கையால் எதிரி அன்பழகன் வலது கையை பிடித்து கையை உதறிவிட்டேன். அப்போது கத்தி கீழே விழுந்து விட்டது. உடனே எதிரி அன்பழகன் எனது வலது கை விரல்களை பிடித்து வாயால் கட்டை விரலை கடிக்க ஆரம்பித்தார். நான் விடு விடு என்று சத்தம் போட்டேன். அவர் தொடர்ந்து வாயால் எனது கட்டை விரலை கடித்துக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டு வயலில் இருந்து எனது அப்பா , அம்மா மற்றும் ராஜா அவரது மனைவி ஆகியோர் ஓடிவந்தவுடன் எதிரி சம்பவ இடத்தை விட்டு உன் சாவு என் கையில்தான் என்று கூறிக்கொண்டு சென்று விட்டார். காயம்பட்ட என்னை ராஜா அவரது இருசக்கர வாகனத்தில் வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது இடையில் 108 ஆம்புலன்ஸ் வந்ததால் நான் அதில் மருத்துவமனைக்கு சென்றேன். வேதாரண்யம் மருத்துவமனையில் மருத்துவர்கள் வெட்டுப்பட்ட இடது கை கட்டைவிரலுக்கு சிகிச்சையளித்தபோதும் ரத்தம் வருவது நிற்காததால் இங்கு சிகிச்சையளிக்க முடியாது. மேல்சிகிச்சைக்கு செல்லுங்கள் என்று மருத்துவர்கள் கூறியதால் நான் தஞ்சாவூர் கேஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தேன். நான் தஞ்சாவூர் கேஜி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது வேதாரண்யம் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** - இல்லை